**1991-ல் உருவாக்கப்பட்ட ஆக்ஷன் ஆன் ப்ரீ-எக்ளாம்ப்ஸியா என்பது யுனைட்டட் கிங்டமை மையமாக கொண்டு இயங்கும் அறக்கட்டளை ஆகும். ப்ரீ-எக்ளாம்ப்ஸியா, எக்ளாம்ப்ஸியா எச்ஈஎல்எல்பி (HELLP) சின்ட்ரோம் அல்லது கர்ப்பத்தின் காரணமாக தூண்டப்படும் உயர் அழுத்தம் (PIH) ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தேவையான உதவிகளையும் ஆதரவையும் நாங்கள் வழங்குகிறோம்.**

ப்ரீ-எக்ளாம்ப்ஸியா நோயால் பாதிக்கப்படும் பெண்களுக்குத் தேவையான உதவி மற்றும் தகவல்களை அளிப்பதற்காக ஆக்ஷன் ஆன் ப்ரீ-எக்ளாம்ப்ஸியா என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து, நாங்கள் ஒரு நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளபோதிலும் எங்கள் கண்ணோட்டம் மற்றும் நோக்கங்களில் எந்த மாற்றமும் இல்லை.

எதிர்காலத்தில் தாய்மார்கள் மற்றும் கர்ப்பப்பையில் உள்ள குழந்தைகளுக்கு வலிப்பு நோய் ஒரு தீவிரமான பிரச்சனையாக இல்லாத சூழ்நிலையை உருவாக்குவதே எங்கள் நோக்கமாகும். விழிப்புணர்ச்சியை அதிகரித்தல், தொழில்நுட்ப ரீதியிலான அறிவு மற்றும் திறமையை உயர்த்துதல் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக தொடர்ந்து வழங்குதல், ப்ரீ - எக்ளாம்ப்ஸியாவை தவிர்ப்பது அல்லது அதன் பாதிப்புகளை குறைப்பதே எங்கள் லட்சியம் ஆகும்.

மேலும் பொதுமக்கள் மற்றும் உடல் ஆரோக்கிய நிபுணர்களுக்கு ப்ரீ-எக்ளாம்ப்ஸியா ஏற்படுதல், அதன் இயல்பு மற்றும் ஆபத்துகள் குறித்து கற்பிப்பதும், தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் அளிப்பதும் எங்கள் நோக்கமாகும். இந்நோய் குறித்து மக்களிடையே பரவலான விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்காகவும் மற்றும் நோய் கண்டறியும் முறைகள் மற்றும் சிகிச்சை முறைகளை மேம்படுத்துவது குறித்தும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறோம். நாங்கள் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்குத் தேவையான உதவிகளை வழங்குவதுடன், இந்நோயினை ஏற்படுத்தும் காரணிகள் குறித்த ஆராய்ச்சி மற்றும் உரிய நோய்க் கண்டறியும் வழிமுறைகள் மற்றும் சிகிச்சை முறைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கின்றோம்.

கர்ப்பிணி பெண்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் மகப்பேறில் தொடர்புடைய உடல் ஆரோக்கிய நிபுணர்கள் ஆகியோருக்கு ப்ரீ - எக்ளாம்ப்ஸியா குறித்த தகவல்களை அளித்துவருகிறோம். தொடர்ந்து மாநாடுகள் மற்றும் கல்விப் பயிற்சி வகுப்புகள் மூலமாக ப்ரீ-எக்ளாம்ப்ஸியா குறித்து தொழில்நிபுணத்துவம் மிக்க கல்வியையும் வழங்குகிறோம். எங்களுடைய தேசிய உதவித் தொலைபேசி எண் (+208 427 4217), மேலும் எங்களிடம் இந்த அமைப்பிற்கு உதவும் உள்ளூர் நண்பர்கள் குழுவும், நிபுணர்களின் அறிவுரை மற்றும் பராமரிப்பிற்குத் தேவையான தொடர்பு மையங்களும் உள்ளன.